**வாசிக்க**: **எசேக்கியல்** 1:1-3

**அந்நிய தேசத்திலும் கர்த்தருருடைய கரம் உன் மேல் அமரும்**.

கர்த்தருக்கு பிரியமானவர்களே கடந்த ஒன்பது மாதங்களும் கர்த்தர் நம்மை வழிநடத்தி, பராமரித்து, பாதுகாத்து போஷித்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் இந்த புதிய மாதத்திற்குள் வரவேற்கிறேன். இந்த மாதம் நாம் எசேக்கியல் தீர்க்கதரிசியின் புத்தகத்தை தியானிக்க போகிறோம். ஒவ்வொரு மாதமும் முதல் தேதியில் நாம் விசுவாசத்தோடு வாக்குதத்த வசனத்தை தியாயானித்து சுதந்தரித்து கொள்வோம்.

கர்த்தராகிய தேவன், பாபிலோன் தேசத்திலே கேபார் நதியண்டையிலே எசேக்கியல் என்கிற ஒரு ஆசாரியனை அழைத்து, அவன் விசுவாச கண்களை திறந்து தரிசனங்களை காண செய்கிறார். அந்த தரிசனத்திலே கர்த்தருடைய கரம் அவன் மேல் அமர்ந்ததை அவன் காண்கிறான். அதன் பின்பு தான் பரலோக தரகசனங்களை காணும்படி அவன் ஆவிக்குரிய கண்கள் திறக்கப்படுகிறது. தேவனுடைய சித்தத்தின்படி, அவருடைய மகத்துவங்களையும் மகிமையையும் சொல்லும் தீர்க்கதரியாக ஊழியம் செய்வதற்கு இதுவே எசேக்கியலுக்கு ஆரம்பமாகும். இந்த மாதத்தின் முதல்நாளாகிய இன்று உங்கள் வாழ்க்கையில் கர்த்தருடைய சித்தத்தின்படியே, அவருடைய மகிமை வெளிபடும்படியாக உங்கள் மேல் அவர் கரம் அமர்ந்து ஆசீர்வதிக்கப்போகிறது. அதை விசுவாசத்தோடு பெற்று கொள்வீர்களா....!

விசுவாசிக்க;

கர்த்தருக்குள் பிரியமானவர்களே, எகிப்திலே அடிமையாயிருந்தவர்களை தேவனாகிய கர்த்தர் மீட்டு, கானான் என்கிற அருமையான தேசத்தை தந்து ஆசீர்வதித்தபோது, அதை உணராமல், மறுபடியும் பாவம் செய்தபடியாலே இப்போது பாபிலோனிலே அடிமைகளாக அவதிபட நேரகட்டது. அந்த வேளையில் தான், அந்நிய தேசத்திலும் தேவனுக்கு பயந்து அவரை உண்மையாக ஆராதிக்கிற ஆசாரிய குடும்பத்திலிருந்து எசேக்கியலை தேவன் தெரிந்து கொண்டு விடுதலை ஊழியத்தில் பயன்படுத்துகிறார்.

இதை வாசித்து கொண்டிருக்கும் அருமையான தேவபிள்ளையே சூழ்நிலைகளை பார்க்காமல், நீயும் தேவனை உண்மையாக ஆராதித்து ஒவ்வொருநாளும் அவர் வார்த்தையை தியானித்து வாழ்ந்தால் பின்வரும் ஆசீர்வாதம் உன்வாழ்விலும் வரும்.

விசுவாசி, இந்த மாதம்

1) கர்த்தருடைய கரம் உன் மேல் அமர்ந்திருக்கிறது.

2) உன் ஆவிக்குரிய கண்கள் திறக்கப்பட்டு தரிசனங்களை காணப்போகிறாய்.

3) தேவனை விட்டு பின்வாங்கி போன அநேகரை நீ அவர்பக்கம் திருப்ப போகிறாய்.

மேற்கண்ட காரியங்களை நீ விசுவாசித்து தேவபிரசனத்திலே காத்திரு. இந்த அக்டோபர் மாதம் முழுதும் கர்த்தர் உன்னை சிறைபட்டவர்களை விடுவிக்க, அடிமைதன சங்கிலிகளை அறுக்க கண்ணீர்களிலிருப்பவர்களை ஆறுதல்படுத்த ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை பயன்படுத்தியதை போல பயன்படுத்துவார்.

நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்தஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம்பண்ணினார். தேவன் அவருடனே கூட இருந்தபடியினாலே அவர் நன்மைசெய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார். அப்போஸ்தலர் 10 :38

**ஜெபம்**

பரலோக பிதாவே! உங்க கரம் என்மேல் அமருவதாக. என்னுடைய கண்கள் திறக்கப்பட்டு தரிசனங்களை காணுவதாக. ஆமென்